**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**

**S.C. No.98/2020**
**PW3**

| | | |
|---|---|---|
| Name | : | தீபா |
| Father's Name | : | ராஜ்குமார் |
| Village | : | கோணலூர் |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 29.07.2025.

A1 to 7 present. A8 to 11 absent. Petition U/s.317 Crpc filed and allowed for A8 to 11.

**முதல் விசாரணை**

நான் கோணலூர் கிராமத்தில் வசித்து IT கம்பெனியில் சாப்ட்வேர் இன்சினியராக மும்பையில் பணிபுரிகிறேன். அ.சா.1 சிவா அ.சா.2 விஜய் ஆகியோர் என் சகோதரர்கள் . ஆஜர் எதிரிகளை தெரியும் . அவர்கள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள். ஆஜராகாத எதிரிகளையும் தெரியும். கடந்த 14.12.2015 அன்று மாலை 4 மணியளவில் அப்போது ஊர்தலைவராக இருந்த சுமதி , பெருமாள், சீத்தாராமன், பிரகாஷ், சண்முகம், பாலு, தினேஷ், அர்விந்த், ஆறுமுகம், செல்வராஜ் , கார்த்தி ஆகியோர் கையில் கொம்பு , தடி, கத்தி, இரும்பு ராடு ஆகியவற்றை எடுத்து வந்து எங்கள் பட்டா நிலத்தில் நாங்கள் 17 ஆண்டுகளாக வளர்த்த 63 தேக்குமரத்தை அடியோடு வெட்டிவிட்டார்கள். எங்கள் வீட்டின் காம்பவுண்டு சுவர் உயரம் 12 அடி நீளம் 60 அடி அளவு கொண்டி சுவற்றை இடித்துவிட்டார்கள் . அப்போது நான், சிவா, விஜய், சுகந்தா, மலர்கொடி வீட்டில் இருந்தோம். அப்போது சிவா பெருமாளை ஏன் இப்படி செய்தாய் என்று கேட்க போனார். அப்போது எதிரிகள் தகாத வார்த்தைகளால் திட்டி உங்கள் எல்லோரையும் வெட்டிவிடுவேன் என்று திட்டினார்கள் . உங்கள்

கேசை வாபஸ் வாங்குங்கள் இல்லையென்றால் உங்களை பெட்ரோல் ஊற்றி கொளுத்திவிடுவேன் என்று மிரட்டினார்கள் . இது சம்மந்தமாக என் தம்பி சிவா சம்பவம் நடந்த மறுநாள் வேட்டவலம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் . எங்கள் பட்டா இடத்தின் வழியாக சுடுகாட்டிற்கு செல்ல பாதையை அமைக்க ஊர்க்காரர்கள் முயற்சி செய்தார்கள். என் பாட்டி கண்ணம்மா சென்னை உயர்நீதிமன்றத்தில் தடை உத்தரவு பெற்றார் . அதையும் மீறி ரோடு போட பார்த்ததால்தான் இந்த பிரச்சனை ஏற்பட்டது. இது சம்மந்தமாக போலிசார் எங்களை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகளுக்கும் எங்களுக்கும் தனிப்பட்ட முறையில் எந்த பிரச்சனையும் கிடையாது. சுடுகாட்டுக்கு போகும் வழியை காலம்காலமாக ஊர் மக்கள் பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரிதான் . சம்பவ காலத்தில் எதிரிகளுடன் சுமார் 50 நபர்கள் இருந்தார்கள் என்றால் சரிதான் . எதிரிகள் எந்தெந்த ஆயுதங்களை கையில் வைத்திருந்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்ல முடியாது . சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் காலத்தில் அதிகமாக மழை பெய்த காலம் என்றால் சரிதான் . அந்த மழை வெள்ளம் எங்கள் வீட்டிற்கு மேற்கு பக்கம் உள்ள ஓடை வழியாகதான் செல்லும் என்றால் சரிதான் . அந்த ஓடையை தடுக்கும் வகையில் மதில் சுவர் கட்டியுள்ளோம் என்றால் சரியல்ல. என் வீட்டிற்கும் சம்பவ இடத்திற்கும் இடையில் சுமார் 15 அடி இருக்கும். ஏற்கனவே பிரச்சனை இருந்து வந்ததால் நாங்கள் யாரும் போகவில்லை. ஏற்கனவே எங்களுக்கும் ஊர்மக்களுக்கும் சுடுகாட்டு பாதை சம்மந்தமாக இருந்து வந்த முன்பகைனை வைத்து என் தம்பி கொடுத்த பொய் புகாரை சார்ந்து சாட்சி அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல . எதிரிகள் யாரும் மரங்களை வெட்டவோ, என் தம்பியை மிரட்டவோ, அச்சுறுத்தவோ இல்லை என்றும், நடந்ததாக சொல்லப்படும் சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C .Gopinath**

Additional District Judge,

Tiruvannamalai.